The Hindu (English)
Dated: 22.04.2025

# High Court refuses to reject plea filed by OPS challenging MP Navas Kani's election

**The Hindu Bureau**
CHENNAI

The Madras High Court on Monday refused to reject an election petition filed by former Chief Minister O. Panneerselvam challenging the victory of Ramanathapuram MP K. Navas Kani of the Indian Union Muslim League (IUML) in the June 2024 Lok Sabha polls.



The plea challenged the victory of the IUML leader and Ramanathapuram MP in the 2024 Lok Sabha election.

Justice C.V. Karthikeyan dismissed an application filed by the MP to reject the election petition, and held that that the veracity of the allegations regarding the suppression of facts in the election affidavit filed by the MP could be ascertained only if a full-fledged trial was conducted by the High Court. "The parties must be granted an opportunity to put forward their views by gracing the witness box. It would not be an exercise in futility (as claimed by the MP in his plea to reject the election petition at the threshold) but rather it would be a venture to discover the correct facts," the judge observed.

In his election petition, Mr. Panneerselvam had accused the MP of having not disclosed in his election affidavit that he was the director in S.T. Couriers Private Limited, Madras Media Private Limited and Pelita Nasi Kandar Private Limited, and the remuneration that he was receiving from those enterprises. The election petitioner had also so wondered how the MP could have obtained a loan of ₹91.75 lakh from his son, as claimed in the affidavit filed along with the nomination papers, when the latter's income in the last five years was only around ₹20 lakh. Therefore, he sought to set aside the election on the ground of false declaration.

Justice Karthikeyan held that the genuineness of the allegations could be found out only on analysis of oral and documentary evidence to be adduced by both sides during the course of the trial. He said the MP could produce evidence to disprove the allegations, instead of seeking to reject the election petition *in limine*.

Following his expulsion from the AIADMK, Mr. Panneerselvam contested the election from Ramanathapuram constituency as an independent candidate supported by the BJP. When the votes were counted on June 4, 2024, Mr. Kani was declared to have won by a margin of 1.66 lakh votes after he was found to have secured 5,09,664 votes as against 3,42,882 votes polled by Mr. Panneerselvam.

The Hindu (English)
Dated: 22.04.2025

# EC is 'compromised', claims Rahul Gandhi during his U.S. visit

## The Congress leader cites the 'unusual' increase in the voter turnout in the last two hours of voting during the Maharashtra Assembly election

**The Hindu Bureau**
NEW DELHI

Congress leader Rahul Gandhi, who is on a visit to the United States, has alleged that the Election Commission is "compromised", and cited the "unusual" increase in the voter turnout in the last two hours of voting during the Maharashtra Assembly election.

Mr. Gandhi, who arrived in the U.S. on April 19, made the remarks at an event in Boston on Sunday. He asserted that the Congress party has been raising this issue and claimed that "there is something wrong with the system".

The Leader of Opposition in the Lok Sabha said that more people voted in the Maharashtra Assembly polls than there were in the State.

"The Election Commission gave us a voting figure for 5.30 p.m., and between 5.30 p.m. and 7.30 p.m., 65 lakh voters voted. This is physically impossible to happen. For a voter to vote, it takes approximately three minutes, and if you do the math, it would mean that there were lines of voters till 2 a.m., but this did not happen," Mr. Gandhi said.



**Voicing concern:** Rahul Gandhi in a meeting with Overseas Congress chief Sam Pitroda in Boston on Sunday. ANI

### 'They changed law'

"When we asked them for the videography, they not only refused but also changed the law so that now we are not allowed to ask for the videography. It is very clear to us that the Election Commission is compromised, and it is very clear that there is something wrong with the system. I have said this multiple times," the party leader added.

The Congress leader, who began his interactions with the business and Indian community members, will visit Brown University in Rhode Island on April 21-22.

At Brown University, the Leader of the Opposition is scheduled to deliver a lecture and interact with faculty members and students.

Deccan Chronicle

Dated: 22.04.2025

# EC compromised, Rahul says in US

DC CORRESPONDENT
NEW DELHI, APRIL 21

A political slugfest broke out between the BJP and the Congress after the Leader of the Opposition in the Lok Sabha, Rahul Gandhi, speaking at an event in Boston in the United States, alleged that the poll panel was "compromised". He attacked the EC citing turnout figures in the Maharashtra election, drawing a strong reaction from the BJP, which called him a "traitor". Mr Gandhi noted he had been raising the issue earlier and alleged "there is something wrong with the system".

Mr Gandhi claimed that, in simple terms, more people voted in the Maharashtra Assembly elections than there were adults in the state.

"The Election Commission gave us a voting figure for 5:30 pm, and between 5:30 pm and 7:30 pm, 65 lakh voters voted. This is physically impossible to happen. For a voter to vote, it takes approximately three minutes, and if you do the math, it would mean that there were lines of voters till 2 am, but this did not happen," he said.

"When we asked them for the videography, they not only refused but also changed the law so that now we are not allowed to ask for the videography," Mr Gandhi said. "It is very clear to us that the Election Commission is compromised, and it is very clear that there is something wrong with the system. I have said this multiple times."

■ P7

# COLLEGIUM RECOMMENDS 7 JUDGES' TRANSFER

**New Delhi, April 21:** The Supreme Court collegium has recommended the transfer of seven, including four from Karnataka, high court judges.The collegium, headed by Chief Justice Sanjiv Khanna, took the decision in meetings held on April 15 and 19.

"With a view to infuse inclusivity and diversity at the level of high courts and to strengthen the quality of administration of justice, the Supreme Court collegium in its meetings held on 15th April, 2025 and 19th April, 2025 has recommended transfer of the judges of high courts," a collegium resolution said.

The recommendations asked Justice Hemant Chandangoudar from Karnataka High Court to be sent to Madras High Court, Justice Krishnan Natarajan to Kerala.

# EC compromised, Rahul says in US

FROM PG 1

Hitting back, the BJP accused Mr Rahul Gandhi of "treachery" for questioning the EC. Dubbing Mr Gandhi a "traitor" for his alleged remarks against the EC, the BJP accused him of venting his frustration over the ED's action in the National Herald case on the poll body. The ruling party claimed that insulting the nation and blaming Indian democracy to "cover up his own electoral failures has become his favourite sport" and that he is "addicted to venting out his political frustration on foreign soil".

Attacking Mr Gandhi over his remarks, BJP national spokesperson Sambit Patra said: "You are venting the ire over the ED's (action in the National Herald case) on the Election Commission. Nothing will happen by doing so...The ED will not spare you because agencies work on the basis of facts and the National Herald matter is an open and shut case.

The New Indian Express

Dated: 22.04.2025

# EC compromised, says Rahul on Maha poll in US; BJP livid

PREETHA NAIR @ New Delhi

LEADER of Opposition in Lok Sabha Rahul Gandhi has alleged that the 'Election Commission is "compromised" and claimed that there is something very wrong with the electoral system, citing the surge in the number of voters in the Maharashtra election.

His comments, made at an event in the US, drew a strong reaction from the BJP which called him a "traitor". During his speech, Gandhi said that he had been raising the issue and asserted that "there is something wrong with the system". The Congress MP, who arrived in the US on Saturday, made the remarks at an event in Boston on Sunday.

He claimed that, in simple terms, more people voted in the Maharashtra assembly elections than the total number of adults in the state. "The EC gave us a voting figure for 5:30 pm, and between 5:30 pm and 7:30 pm, 65 lakh people voted. This is physically impossible. For a voter to vote, it takes approximately three minutes, and if you do the math, it would mean that there were lines of voters till 2 am, but this did not happen," he said.



**'POLL ROLL BUNGLING'**
Rahul Gandhi alleged that, in simple terms, more people voted in the Maharashtra assembly polls than the total number of adults in the state.

"When we asked them for the videography, they not only refused but also changed the law so that now we are not allowed to ask for the videography,' Gandhi said. "It is very clear to us that the Election Commission is compromised, and it is very clear that there is something wrong with the system. I have said this multiple times," he asserted.

The BJP-Shiv Sena-NCP coalition Mahayuti had trounced the Maha Vikas Aghadi alliance of the Congress, NCP (SP) and Shiv Sena (UBT) in the Maharashtra polls in November last year. However, the BJP linked his criticism to the Enforcement Directorate's action in the National Herald case, alleging he had not only "insulted" the country's institutions on foreign soil but had also indulged in corruption, and said he and his mother will be "sent to jail" for "embezzlement".

Taking exception to Gandhi's remarks against the Election Commission, BJP MP and national spokesperson Sambit Patra accused the Congress leader of venting his ire over the Enforcement Directorate's action in the National Herald case on the Election Commission.

D.T. Next, Dated: 29.04.2025

# Rahul in US: Very clear EC is compromised

**BOSTON/NEW DELHI: The Election Commission is "compromised", Congress leader Rahul Gandhi alleged at an event in the US as he attacked the poll panel citing turnout figures in the Maharashtra election, drawing a strong reaction from the BJP which called him a "traitor".**

Gandhi noted that he had been raising the issue earlier also and alleged that "there is something wrong with the system".

However, the BJP linked his criticism to the Enforcement Directorate's action in the National Herald case, alleging he had not only "insulted" the country's institutions on foreign soil but had also indulged in corruption, and said he and his mother will be "sent to jail" for "embezzlement".

Gandhi arrived in the US on Saturday and made the remarks at an event in Boston on Sunday.

The Leader of Opposition in the Lok Sabha claimed that, in simple terms, more people voted in the Maharashtra assembly elections than there were adults in the state.

"The Election Commission gave us a voting figure for 5:30 pm, and between 5:30 pm and 7:30 pm, 65 lakh voters voted. This is physically impossible to happen. For a voter to vote, it takes approximately three minutes, and if you do the math, it would mean that there were lines of voters till 2 am, but this did not happen," he said.


"When we asked them for the videography, they not only refused but also changed the law so that now we are not allowed to ask for the videography," Gandhi said.

"It is very clear to us that the Election Commission is compromised, and it is very clear that there is something wrong with the system. I have said this multiple times," he said.

The BJP-led coalition had trounced the Congress, NCP (SP) and Shiv Sena (UBT) alliance in the Maharashtra polls in November last year.

Taking exception to Gandhi's remarks against the Election Commission, BJP spokesperson Sambit Patra alleged that Gandhi was venting his ire over the Enforcement Directorate's action in the National Herald case on the Election Commission.

"Nothing will happen by doing so. The ED will not spare you because agencies work on the basis of facts and the National Herald matter is an open and shut case.



"You are a traitor, not just because you insult Indian institutions and Indian democracy on foreign soil but also because you and your mother have embezzled crores of rupees of the country in the National Herald case. You and your mother will not be able to get away with this," Patra said.

▸ More on P7

# After Rahul's attack on poll panel, BJP calls Oppn Leader 'traitor'

**NEW DELHI: The BJP on Monday called Congress leader Rahul Gandhi a "traitor" for his remarks against the Election Commission and accused him of venting his frustration over ED action in the National Herald case on the poll body.**

The former Congress chief, who is on a visit to the US, raised questions on the BJP-led coalition's victory in the Maharashtra polls and alleged the Election Commission (EC) was compromised.

Flaying Rahul Gandhi for his remarks, BJP national spokesperson Sambit Patra said, "You are venting the ire over the Enforcement Directorate on the Election Commission."

"The ED will not spare you because agencies work on the basis of facts and the National Herald matter is an open-and-shut case. You will not be spared. You and your mother will be caught with the proceeds of crime and sent to jail," he said at a press conference at the BJP headquarters.

> **You will not be spared. You and your mother will be caught with the proceeds of crime and sent to jail**
>
> — **Sambit Patra,** BJP national spokesperson

"You are a traitor, not just because you insult Indian institutions and Indian democracy on foreign soil but also because you and your mother embezzled crores of rupees of the country in the National Herald case. You and your mother will not be able to get away with this," Patra said.

He also asked Rahul Gandhi if the EC was compromised when Priyanka Gandhi Vadra, his sister, was elected to the Lok Sabha from the Wayanad seat in Kerala. "In the 2024 Lok Sabha polls, the BJP won 240 seats and the Congress 99. The Congress was then calling the results its victory and the BJP's defeat. Was the EC compromised then?" he asked.

Daily Thanthi

Dated: 22.04.2025

ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக்கோரி

# ராமநாதபுரம் எம்.பி. நவாஸ் கனி மனுவை தள்ளுபடி செய்து ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஏப்.22-

நாடாளுமன்ற தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர் நவாஸ்கனி போட்டியிட்டார். சுயேச்சையாக போட்டியிட்ட முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தைவிட ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 782 வாக்குகள் வித்தியாசத்தில் நவாஸ்கனி வெற்றி பெற்றார்.

இவரது தேர்தல் வெற்றியை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் வழக்கு தொடர்ந்தார். அதில், நவாஸ் கனி வேட்புமனுவில் பல உண்மை தகவல்களை மறைந்ததாகவும், முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக்கோரி சென்னை ஐகோர்ட்டில் நவாஸ்கனி மனு தாக்கல் செய்தார், அதில், ஓ.பன்னீர்செல்வம் கூறும் குற்றச்சாட்டு பொய்யானது. ஆதாரமற்றது. அதனால் தேர்தல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த தேர்தல் வழக்கை நீதிபதி சி.வி.கார்த்திகேயன் விசாரித்து வருகிறார். வழக்கை நிராகரிக்கக்கோரிய நவாஸ் கனியின் மனுவை நீதிபதி விசாரித்து, தீர்ப்பை தள்ளி வைத்திருந்தார். இந்தநிலையில், ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக்கோரிய நவாஸ் கனியின் மனுவை தள்ளுபடி செய்து நேற்று உத்தரவிட்டார். இந்த தேர்தல் வழக்கின் விசாரணையை ஜூன் 16-ந்தேதிக்கு தள்ளிவைத்தார்.

Daily Thanthi

Dated: 22.04.2025

தேர்தல் வெற்றியை எதிர்த்து விஜயபிரபாகரன் வழக்கு:

# மாணிக்கம் தாகூரின் மனுவை மீண்டும் விசாரிக்க வேண்டும்

## சென்னை ஐகோர்ட்டுக்கு, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஏப்.22-

தேர்தல் வெற்றியை எதிர்த்து விஜயபிரபாகரன் தொடர்ந்த வழக்கில், மாணிக்கம்தாகூர் தாக்கல் செய்த மனுவை ஐகோர்ட்டு மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று சுப்ரீம்கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### தேர்தல் வழக்கு

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட மாணிக்கம் தாகூர், 4 ஆயிரத்து 379 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரது வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி, தே.மு.தி.க வேட்பாளர் விஜய பிரபாகரன், சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தேர்தல் வேட்புமனுக்களில் உண்மை தகவல்களை மறைத்ததாகவும், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான மனுவில் கூறப்பட்டிருந்த சில குற்றச்சாட்டுகளை நீக்கக் கோரி காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### மேல்முறையீடு

இந்த மனுவை விசாரித்த நீதிபதி சதீஷ்குமார், மாணிக்கம் தாகூரின் மனுவை தள்ளுபடி செய்து கடந்த மார்ச் 4-ந்தேதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கு எதிராக மாணிக்கம் தாகூர் சார்பில் வக்கீல் உஸ்மான் கனிகான் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். இந்த மனுவை நீதிபதிகள் சூர்ய காந்த், என்.கோடீஸ்வர் சிங் அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது.

அப்போது மனுதாரர் மாணிக்கம் தாகூர் சார்பில் மூத்த வக்கீல் அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி, 'வழக்கின் பின்னணியை குறிப்பிட்டு மூல மனுதாரர் விஜயபிரபாகரன் தேர்தல் வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்த இடையீட்டு மனுவில், தேர்தல் வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளவை உண்மைக்கு மாறானவை. குறிப்பாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களை வழங்கவில்லை, எவ்வித ஆதாரமும் இன்றி, அரசியல் உள்நோக்கத்துடன் இந்த தேர்தல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த தேர்தல் வழக்கை ரத்துசெய்ய வேண்டும்' என கோரியிருந்தார்.

### மீண்டும் விசாரணை

விஜய பிரபாகரன் சார்பில் வக்கீல் பி.கருணாகரனுடன் மூத்த வக்கீல் முரளிதர் ஆஜராகி, விஜயபிரபாகரன் தரப்பில் கூறிய சங்கதிகளில் குழப்பம் இருந்தால் அதை சென்னை ஐகோர்ட்டே முடிவு செய்ய வேண்டும் என வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்துகொண்ட சுப்ரீம்கோர்ட்டு, தேர்தல் வழக்கின் குற்றச்சாட்டுகளை நீக்கக் கோரி காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தாக்கல் செய்த மனுவை ஐகோர்ட்டு மீண்டும் விரைவாக விசாரிக்க வேண்டும் என உத்தரவிட்டு, மேல்முறையீட்டு மனுவை முடித்து வைத்தது.

Daily Thanthi

Dated: 22.04.2025

# 'வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்க்க தற்போதைய நடைமுறையே போதுமானது'

## தேர்தல் ஆணையத்துக்கு எதிரான வழக்கில் ஐகோர்ட்டு தீர்ப்பு

சென்னை, ஏப்.22-

'வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்க்கதேர்தல் ஆணையத்தின் தற்போதைய நடைமுறையே போதுமானது' என கொல்கத்தா ஐகோர்ட்டு தீர்ப்பு கூறி உள்ளது.

### வேட்பாளரின் குடியுரிமை

இந்தியாவில் நடைபெறும் தேர்தல்களில் இந்திய குடியுரிமை பெற்ற வெளிநாட்டினர் போட்டியிடுவதை தடுக்கும் வகையில் வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்ப்பதற்காக புதிதாக ஒரு வழிகாட்டுதலை உருவாக்கி அதனை செயல்படுத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என மாணிக் மண்டல் என்பவர் கொல்கத்தா ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

வெளிநாட்டினர் சட்டவிரோதமாக இந்திய குடியுரிமையை பெறுவது ஜனநாயக செயல்முறைக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனுவை தலைமை நீதிபதி டி.எஸ். சிவஞானம் மற்றும் நீதிபதி சைதாலி சாட்டர்ஜி ஆகியோர் விசாரித்தனர்.

### முழுமையாக விசாரிக்கப்படும்

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், 'ஒரு வேட்பாளரின் தகுதி அல்லது குடியுரிமைக்கு எதிராக முறையாக தாக்கல் செய்யப்படும் எந்தவொரு ஆட்சேபனையும் ஆணையத்தால் முழுமையாக விசாரிக்கப்படும்' என தெரிவிக்கப்பட்டது.

மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, 'மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உள்ளிட்ட விரிவான சட்ட கட்டமைப்புகளின் கீழ் தேர்தல் ஆணையம் ஏற்கனவே செயல்படுகிறது.

தேர்தல்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டவுடன் ஆணையத்தின் பொறுப்பு தொடங்குகிறது. மேலும் அனைத்து வேட்புமனுக்களும் உரிய ஆய்வுக்கு உட்படுத்தப்படும். மனுதாரரின் கோரிக்கையான வேட்பாளரின் குடியுரிமை குறித்த புதிய வழிகாட்டுதல் என்பது சட்டமன்றம் தொடர்புடையது. இது இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவின் படி நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் இல்லை.

### தள்ளுபடி

முக்கியமாக, நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தேர்தல்களில் ஒரு வேட்பாளரின் வேட்புமனு குறித்து ஆட்சேபனைகளை முறையான சட்ட வழிகள் மூலம் தெரிவிக்க குடிமக்களுக்கு முழு உரிமை உண்டு.

வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்க்க தேர்தல் ஆணையத்தின் தற்போதைய நடைமுறையே போதுமானது' எனக்கூறி மனுவை தள்ளுபடி செய்தது. மேற்கண்ட தகவல் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

Daily Thanthi
Dated: 22.04.2025

மராட்டிய சட்டசபை தேர்தலில்

# தேர்தல் கமிஷன் சமரசத்துக்கு உள்ளாகி இருப்பது தெளிவாகிறது

## அமெரிக்காவில் ராகுல் காந்தி பேச்சு

பாஸ்டன், ஏப்.22-
மராட்டிய சட்டசபை தேர்தலில் தேர்தல் கமிஷன் சமரசத்துக்கு உள்ளாகி இருப்பது தெளிவாக தெரிவதாக அமெரிக்காவில் ராகுல் காந்தி பேசியுள்ளார்.


ராகுல் காந்தி

### அமெரிக்காவில் ராகுல் காந்தி

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதில் பல்கலைக்கழகத்தில் உரை, மாணவர்களுடன் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

பாஸ்டனில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மராட்டிய தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக குற்றம் சாட்டினார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

### 65 லட்சம் வாக்காளர்கள்

மராட்டிய சட்டசபை தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளன. எளிமையாக சொன்னால், மாநிலத்தில் உள்ள பெரியவர்களை விட அதிகமானோர் வாக்களித்து இருக்கிறார்கள். அந்த தேர்தலில் வாக்களித்தவர் எண்ணிக்கையாக மாலை 5.30 மணிக்கு ஒரு கணக்கை தேர்தல் கமிஷன் வழங்கியது. ஆனால் 5.30-க்கும், இரவு 7.30 மணிக்கும் இடையே 65 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்து இருந்தனர்.

இது நடைமுறையில் சாத்தியமில்லை. ஒரு வாக்காளர் வாக்களிக்க சுமார் 3 நிமிடங்கள் ஆகும். அப்படி 65 லட்சம் பேர் வாக்களிக்கவேண்டுமென்றால் அதிகாலை 2 மணி வரை வாக்காளர்கள் வரிசையாக இருந்திருப்பார்கள் என்று அர்த்தம். ஆனால் இது நடக்கவில்லை.

### சட்டத்தை மாற்றி விட்டனர்

அதற்கான வீடியோ பதிவை கேட்டபோது, அவர்கள் தர மறுத்தது மட்டுமின்றி, சட்டத்தையும் மாற்றி விட்டனர். இதனால் இப்போது வீடியோ பதிவு கேட்க எங்களுக்கு அனுமதி இல்லை.

இதன் மூலம் மராட்டிய தேர்தலில் தேர்தல் கமிஷன் சமரசத்துக்கு உள்ளாகி இருப்பது மிகவும் தெளிவாக தெரிகிறது. இந்த அமைப்பில் ஏதோ தவறு இருப்பது மிகவும் தெளிவாக தெரிகிறது. இதை நான் பலமுறை கூறிவிட்டேன்.

இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.

### பா.ஜனதா கடும் கண்டனம்

ராகுல் காந்தியின் இந்த கருத்துக்கு பா.ஜனதா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் இந்திய அரசியல்சாசன நிறுவனங்களை இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து பா.ஜனதா செய்தி தொடர்பாளர் சம்பித் பத்ரா கூறும்போது, 'நேஷனல் ஹெரால்டு வழக்கில் உங்கள் மீது அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்திருப்பதன் காரணமாக தேர்தல் கமிஷன் மீது நீங்கள் கோபத்தை கொட்டுகிறீர்கள். ஆனால் இப்படி செய்வதால் எதுவும் நடக்காது' என ஆவேசமாக தெரிவித்தார்.

மேலும் அவர், 'நீங்கள் ஒரு துரோகி. நீங்கள் இந்திய நிறுவனங்களையும், இந்திய ஜனநாயகத்தையும் வெளிநாட்டு மண்ணில் அவமதிப்பதால் மட்டுமல்ல, நீங்களும், உங்கள் தாயும் (சோனியா) நேஷனல் ஹெரால்டு வழக்கில் நாட்டின் கோடிக்கணக்கான ரூபாயை மோசடியும் செய்திருக்கிறீர்கள். நீங்களும், உங்கள் தாயும் இதிலிருந்து தப்பிக்க முடியாது' என்றும் கூறினார்.

Dinamalar
Dated: 22-04-2025

# தேர்தல் வழக்கு நவாஸ்கனி மனு தள்ளுபடி

**சென்னை, ஏப். 22–**

ராமநாதபுரம் எம்.பி., நவாஸ்கனி, தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி தாக்கல் செய்த மனுவை, சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ராமநாதபுரம் தொகுதியில், கடந்த ஆண்டு நடந்த லோக்சபா தேர்தலில், போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர் நவாஸ்கனி, தன்னை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வத்தை வென்றார்.

நவாஸ்கனியின் வெற்றியை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில், பன்னீர்செல்வம் மனு தாக்கல் செய்தார். மனுவில், 'தேர்தல் வேட்பு மனுவில், நவாஸ்கனி உண்மை தகவல்களை மறைத்துள்ளார். ஊழல் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்' என, குறிப்பிட்டிருந்தார்.

பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கை நிராகரிக்க கோரி, எம்.பி., நவாஸ்கனி மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி சி.வி.கார்த்திகேயன், தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி, நவாஸ்கனி எம்.பி., தாக்கல் செய்த மனுவை, தள்ளுபடி செய்து உத்தரவிட்டு, தேர்தல் வழக்கை, அடுத்த கட்ட விசாரணைக்கு, ஜூன் 16ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

Dinamalar

Dated: 22.04.2025

# தேர்தல் வெற்றி தொடர்பான வழக்கு மாணிக்கம் தாகூர் மனு தள்ளுபடி

**– டில்லி சிறப்பு நிருபர் –**

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர், கடந்த லோக்சபா தேர்தலில் தமிழகத்தின் விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து, தே.மு.தி.க., சார்பில் போட்டியிட்ட விஜய பிரபாகரன், மாணிக்கம் தாகூரின் வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அதில், 'மாணிக்கம் தாகூர், தன் வேட்புமனுவில் உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவித்துள்ளார். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, அவர் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார். எனவே, அவரது வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும்' என, கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், தனக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீக்கக்கோரி, மாணிக்கம் தாகூர் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில், மாணிக்கம் தாகூர் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை, நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் என்.கே.சிங் அமர்வில் நேற்று வந்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

தேர்தல் வெற்றியை செல்லாது என அறிவிக்கக்கூடிய பிரதான வழக்கு, ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே இந்த விவகாரத்தில், நாங்கள் எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க முடியாது.

அதனால், இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரருக்கு, இந்த விவகாரத்தில் ஏதேனும் கோரிக்கை இருந்தால், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தை நாடலாம்; அவ்வாறு நாடும்பட்சத்தில், சட்ட விதிகளுக்கு உட்பட்டு உயர் நீதிமன்றம் அந்த மனுக்களை பரிசீலிக்கலாம்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar

Dated: 22-04-2025

# வேட்பாளர் குடியுரிமை சரிபார்ப்பு பழைய செயல்முறை போதுமானது

## கொல்கட்டா உயர் நீதிமன்றம் கருத்து

**சென்னை, ஏப். 22–**

'தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்க்க, தேர்தல் கமிஷன் பின்பற்றும் செயல்முறை போதுமானது' என, கொல்கட்டா உயர் நீதிமன்றம் தெரிவித்து உள்ளது.

நாட்டில் நடக்கும் தேர்தலில், வெளிநாட்டினர் பங்கேற்பு தொடர்பாக, மாணிக் பகிர் என்பவர் கொல்கட்டா உயர் நீதிமன்றத்தில், பொது நல வழக்கு தொடர்ந்தார். தன் மனுவில், '2026ல் நடக்க உள்ள மேற்கு வங்க சட்டசபை தேர்தலுக்கு முன், வேட்பாளர்களின் குடியுரிமை சரிபார்ப்பு தொடர்பாக, சரியான முறையை செயல்படுத்த, தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும்.

'வெளிநாட்டினர் சட்ட விரோதமாக, இந்திய குடியுரிமை பெறுவது, ஜனநாயக செயல்முறைக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

'எனவே, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் குடியுரிமையை சரிபார்க்க, புதிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

மனுவை தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம், நீதிபதி சைதாலி சாட்டர்ஜி ஆகியோர் விசாரித்தனர். தேர்தல் கமிஷன் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், 'அனைத்து வேட்பு மனுக்களும், உரிய ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

'தற்போதைய செயல்முறையே போதுமானது' என எடுத்துரைத்தார். அதை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஒரு வேட்பாளரின் தகுதி அல்லது குடியுரிமைக்கு எதிராக, முறையாக தாக்கல் செய்யப்படும் ஆட்சேபனை அனைத்தும், தேர்தல் கமிஷனால் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும்.

லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களில், ஒரு வேட்பாளரின் வேட்புமனு குறித்த ஆட்சேபனைகளை, முறையான சட்ட வழிகள் வழியே தெரிவிக்க, குடிமக்களுக்கு முழு உரிமை உண்டு எனக் கூறிய நீதிபதிகள், 'தேர்தல் கமிஷனின் தற்போதைய நடைமுறையே போதுமானது' எனக் கூறி, மனுவை தள்ளுபடி செய்தனர்.

Dinamalar
Dated: 22.04.2025

# தேர்தல் கமிஷன் பணிந்து விட்டது அமெரிக்காவில் ராகுல் குற்றச்சாட்டு

பாஸ்டன், ஏப். 22–

''மத்தியில் ஆளும் கட்சிக்கு, தேர்தல் கமிஷன் பணிந்து விட்டது. இதனால் தேர்தல் முடிவுகளில் அது சமரசம் செய்துள்ளது,'' என, அமெரிக்காவில் நடந்த நிகழ்ச்சியில் காங்கிரசைச் சேர்ந்த லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் குறிப்பிட்டது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். பாஸ்டன் நகரில் நடந்த அமெரிக்க வாழ் இந்தியர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

தேர்தல் கமிஷன் சமரசம் செய்துள்ளது. அதன் செயல்பாடுகளில் சில தவறுகள் தென்படுகின்றன. மஹாராஷ்டிரா சட்டசபைக்கு தேர்தல் நடந்தது. அப்போது, மாலை 5:30 மணிக்கு ஓட்டுப் பதிவு சதவீதம் குறித்த ஒரு தகவலை தேர்தல் கமிஷன் அளித்தது. ஆனால், இரண்டு மணி நேரத்தில், அந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

அதாவது, இரண்டு மணி நேரத்தில், 65 லட்சம் பேர் ஓட்டளித்துள்ளனர். இதற்கு சாத்தியமே இல்லை. இதில் இருந்து தேர்தல் கமிஷன், மத்திய அரசுக்கு பணிந்து, சமரசம் செய்துள்ளது தெளிவாக தெரிகிறது. இந்தியா, அமெரிக்கா இடையேயான நட்புறவு வலுவாக இருக்கும் என்று நம்புகிறேன்.



ராகுல்

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கு முன்பும், மஹாராஷ்டிரா தேர்தல் ஓட்டு சதவீதம் குறித்து ராகுல் பல முறை புகார் கூறியுள்ளார். இதற்கு தேர்தல் கமிஷனும் விளக்கம் கொடுத்துள்ளது. 'எந்த ஒரு முறைகேடும் நடக்கவில்லை' என, தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

'ஒவ்வொரு ஓட்டுச்சாவடியிலும், தேர்தல் முகவர்கள் முன்னிலையில்தான் ஓட்டுப் பதிவு நடக்கிறது. அதுபோல, அவர்கள் முன்னிலையில்தான் ஓட்டுகளும் எண்ணப்படுகின்றன. ஓட்டுப் பதிவு இயந்திரங்களில் எந்த முறைகேடும் செய்ய முடியாது' என, தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

ஓட்டு எண்ணிக்கை முடிந்து, அனைத்து தகவல்களும் முழுமையாக பெறப்பட்டு, தொகுக்கப்பட்டு அளித்ததால்தான், ஓட்டு சதவீதம் குறித்த இடைவெளி இருந்ததாகவும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், ராகுல் தொடர்ந்து குற்றஞ்சாட்டுவது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அதிலும், வழக்கம் போல் வெளிநாட்டிற்கு சென்று, இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளதாக, பா.ஜ., தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

'கடந்த லோக்சபா தேர்தலில், 100 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்கு ராகுல் என்ன காரணம் கூறப்போகிறார்?' என்றும், பா.ஜ., தலைவர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

## பா.ஜ., விமர்சனம்

ராகுலின் பேச்சு குறித்து, பா.ஜ., தேசிய செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா கூறியதாவது:

நம் நாடு குறித்தும், அமைப்புகள் குறித்தும் இழிவுபடுத்தும் வகையில் வெளிநாடுகளில் பேசுவதை ராகுல் தொடர்ந்து செய்து வருகிறார்.

இது நாட்டுக்கு செய்யும் துரோகமாகும். மஹாராஷ்டிரா தேர்தலில் அடைந்த தோல்வி, நேஷனல் ஹெரால்டு பத்திரிகை மோசடியில் அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததால் ஏற்பட்ட விரக்தியில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

தவறு செய்துள்ளதால், சுதந்திரமாக செயல்படும் விசாரணை அமைப்புகளின் விசாரணைகளில் இருந்து அவர் தப்பிக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

Dinakaran
Dated: 22.04.2025

### மகாராஷ்டிரா தேர்தலில்

# தேர்தல் ஆணையத்திடம் ஏதோ தவறு இருக்கிறது

## அமெரிக்காவில் ராகுல் குற்றச்சாட்டு



அமெரிக்காவில் ராகுல் காந்தியை சாம் பிட்ரோடா வரவேற்றார்.

பாஸ்டன், ஏப். 22: மகாராஷ்டிரா தேர்தல் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்திடம் ஏதோ தவறு உள்ளது என அமெரிக்காவில் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் 2 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றடைந்த அவர் நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது:

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தலில் வயதுவந்தோர் எண்ணிக்கையை விட அதிகமானோர் வாக்களித்தனர். வாக்குப்பதிவு தினத்தில் மாலை 5.30 மணிக்கு தேர்தல் ஆணையம் எங்களுக்கு தந்த வாக்குப்பதிவு எண்ணிக்கைக்கும்,

மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணிக்குள் தந்த எண்ணிக்கைக்கும் இடையே 65 லட்சம் வாக்குகள் வித்தியாசம் இருந்தது. நடைமுறைப்படி இது சாத்தியமில்லாதது. ஒரு வாக்காளர் வாக்களிக்க குறைந்தபட்சம் 3 நிமிடமாவது ஆகும். அதன்படி கணக்கு செய்து பார்த்தால் நள்ளிரவு 2 மணி வரை வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி

11ம் பக்கம் பார்க்க

### தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்

மும்பையில் செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் கட்சியின் ஊடக மற்றும் விளம்பரத்துறை தலைவர் பவன் கேரா, "தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து எதிர்க்கட்சி தனது சந்தேகத்தை வெளிப்படுத்தி உள்ளது. தேர்தல் ஆணையம் அவற்றுக்கு பதில் அளிக்க வேண்டும். தேர்தல் ஆணையம் பற்றி எங்களுக்கு சந்தேகங்கள் உள்ளது. வாக்குப்பதிவின் கடைசி நேரத்தில் வாக்குப்பதிவில் 10 முதல் 13 சதவீத புள்ளிகள் அதிகரிப்பது மனித ரீதியாக சாத்தியமில்லை" என்றார்.

### வெறுப்பு எண்ணங்களை பகிர்கிறார்: தர்மேந்திரபிரதான்

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறுகையில், "மக்களவை எதிர்க்கட்சி தலைவரான ராகுல்காந்தி தனது கட்சியின் தொடர்ச்சியான தோல்விகளால் விரக்தி அடைந்துள்ளார். வெளிநாட்டு மண்ணில் இருந்து தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மையை மீண்டும் ஒரு முறை கேள்விக்குள்ளாகி உள்ளார். ராகுல் காந்தி வெளிநாட்டில் இருக்கும்போதெல்லாம் இந்தியா மற்றும் இந்தியாவின் ஜனநாயக அமைப்புகள் மீதான தனது வெறுப்பு எண்ணங்களை பகிர்ந்து கொள்வதற்கு தவறுவதில்லை என்பது மிகவும் துரதிஷ்டவசமானது" என்றார்.

### சோனியாவும், ராகுலும் சிறைக்கு செல்வார்கள்

பாஜவின் தேசிய செய்தி தொடர்பாளர் சம்பித் பத்ரா, "அமலாக்கத்துறையின் மீதான கோபத்தை தேர்தல் ஆணையத்தின் மீது வெளிப்படுத்துகிறீர்கள். அவ்வாறு செய்வதன் மூலமாக எதுவும் நடக்காது. அமலாக்கத்துறை உங்களை விட்டுவிடாது. ஏனென்றால் ஏஜென்சிகள் உண்மையின் அடிப்படையில் செயல்படுகின்றன. நேஷனல் ஹெரால்டு விவகாரம் ஒரு திறந்த வழக்கு. நீங்களும், உங்கள் தாயும் குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக பிடிபட்டு சிறைக்கு அனுப்பப்படுவீர்கள். நீங்கள் ஒரு துரோகி. இந்திய நிறுவனங்களையும், இந்திய ஜனநாயகத்தையும் வெளிநாட்டு மண்ணில் அவமதித்ததால் மட்டுமல்ல. நேஷனல் ஹெரால்டு வழக்கில் நீங்களும் உங்கள் தாயாரும் கோடிக்கணக்கான ரூபாய் நாட்டின் பணத்தை மோசடி செய்துள்ளதாலும் கூட நீங்கள் துரோகி தான். நீங்களும் உங்களது தாயாரும் இதில் இருந்து தப்பிக்க முடியாது" என்றார்.

## தேர்தல் ஆணையத்திடம் ஏதோ தவறு இருக்கிறது... முதல் பக்க தொடர்ச்சி

எதுவும் நடக்கவில்லை.

இது தொடர்பாக வீடியோ பதிவை நாங்கள் கேட்ட போது, அவர்கள் மறுத்தது மட்டுமில்லாமல், அதற்கான சட்டத்தையும் மாற்றி விட்டனர். அதனால் இப்போது எங்களால் வீடியோ பதிவை கேட்டு பெற முடியாது. அதற்கு அனுமதியில்லை. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் சமரசம் செய்து கொண்டது எங்களுக்கு மிகவும் தெளிவாக தெரிகிறது. தேர்தல் ஆணையத்திடம் ஏதோ தவறு உள்ளது. இதை நான் பலமுறை கூறி உள்ளேன்.

இவ்வாறு கூறினார்.

அமெரிக்காவில் 2 நாள் பயணத்தில் ரோட் தீவில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடும் ராகுல் காந்தி பல்வேறு நிகழ்ச்சிகளும் பங்கேற்கிறார்.

Dinamani

Dated: 22.04.2025

# தேர்தல் ஆணையம் பாரபட்சம்: அமெரிக்காவில் ராகுல் குற்றச்சாட்டு

பாஸ்டன், ஏப்21: இந்திய தேர்தல் ஆணையம் பாரபட்சத்துடன் செயல்படுகிறது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்கா சென்றுள்ள ராகுல் காந்தி, பாஸ்டன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது:

கடந்த ஆண்டு நடைபெற்ற மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில், அந்த மாநிலத்தில் உள்ள மொத்த வாக்காளர்களைவிட கூடுதல் வாக்குகள் பதிவாகின.

வாக்குப் பதிவு நாளன்று மாலை 5.30 மணி நிலவரப்படி, எத்தனை பேர் வாக்களித்தனர் என்ற விவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. பின்னர் 5.30 மணி முதல் 7.30 மணி வரை, 65 லட்சம் பேர் வாக்களித்தனர். 2 மணி நேரத்தில் இத்தனை பேர் வாக்களிப்பது சாத்தியமற்றது.

ஒரு வாக்காளர் வாக்களிக்க சுமார் 3 நிமிஷங்களாகும். இதை அடிப்படையாக



வைத்து கணக்கிட்டால் 65 லட்சம் பேர் வாக்களித்து முடிக்க அதிகாலை 2 மணியாகும்.

எனவே வாக்குப் பதிவின்போது எடுக்கப்பட்ட காணொலியை தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் கேட்டது. ஆனால் அந்தக் காணொலி வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக அத்தகைய காணொலிகளை கேட்கக் கூடாது என்ற நோக்கில், தேர்தல் நடத்தை விதிகள் மாற்றப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் பாரபட்சத்துடன் செயல்படுகிறது என்பதும், தேர்தல் முறையில் தவறு இருப்பதும் தெளிவாக தெரிகிறது. இதை நான் ஏற்கெனவே பலமுறை கூறியுள்ளேன் என்றார்.

**ராகுல் 'தேசதுரோகி':** ராகுலின் கருத்துகள் தொடர்பாக தில்லியில் பாஜக தேசிய செய்தித்தொடர்பாளர் சம்பித் பத்ரா செய்தியாளர்களிடம் கூறியதாவது: நேஷனல் ஹெரால்ட் வழக்கில் சோனியா, ராகுல் மீது நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. அமலாக்கத் துறை மீதான கோபத்தை தேர்தல் ஆணையம் மீது ராகுல் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் ஒரு தேச துரோகி. வெளிநாட்டில் இந்திய ஜனநாயகத்தையும் இந்திய அரசமைப்புச் சட்ட அமைப்புகளையும் அவமானப்படுத்துவதால் மட்டும் அவர் தேச துரோகி என்று கூறவில்லை. நேஷனல் ஹெரால்ட் வழக்கில் கோடிக்கணக்கான ரூபாயை அவரும், அவரின் தாய் சோனியாவும் கையாடல் செய்துள்ளனர். இதன் காரணமாகவும் அவர் தேச துரோகியாவார். நேஷனல் ஹெரால்ட் வழக்கில் ராகுலும், அவரின் தாய் சோனியாவும் சிறைக்குச் செல்வர் என்றார்.